1978 ஆகஸ்ட் 31]

அதன் மூலம் கிடைக்கக்கூடிய அனுபவத்தை மாநிலம் முழுவதும் விஸ்தரிக்கலாமே. ஆகவே, வசூலித்த தொகையைத் திருப்பிக் கொடுக்கும் யோசனையைக் கைவிட்டு உடனடியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த வேலையைத் துவங்குவார்களா ?

(முற்பகல் 9-20.)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் மட்டுமல்ல, மற்ற மாவட்டத்துக்காரர்கள் எங்களுக்கு ஏன் செய்யவில்லை என்று கேட்பார்கள் என்ற காரணத்தால் முந்தைய அரசு இந்தத் திட்டத்தை கைவிட்டிருக்கிறது என்று கருதுகிறேன். இப்போது எல்லா இடங்களிலும் செய்யலாமா என்ற முறையிலே சில திட்டங்களைப் பற்றி அரசு ஆலோசித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நம்முடைய அரசு சிறிய விவசாயிகளுக்கு ஏராளமான வசதிகளைச் செய்யப் போவதாக அறிவித்திருக்கிறது. ஆனால் சிறிய விவசாயிகள் என்ற பட்டியலில் பல குளறுபடிகள் ஏற்பட்டிருக்கின்றன. சிறிய விவசாயிகளின்மீது தனி அக்கறை செலுத்தி இந்த அரசு அவர்களுக்கு எல்லாம் உண்மையான பட்டா புத்தகத்தை வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

ராணிப்பேட்டை வட்டத்திலுள்ள 'ப்ரி ஹோல்ட்' கிராமங்கள்.

* வினா. 5—திரு. துரை முருகன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வடாற்காடு மாவட்டம், ராணிப்பேட்டை வட்டம், அவரைக்கரை, புளியங்கண், நவ்லாக் ஆகிய கிராமங்கள் ப்ரி ஹோல்ட் கிராமமாக உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அவற்றை ரெவின்யூ கிராமங்களாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) வடாற்காடு மாவட்டம், ராணிப்பேட்டை வட்டம், அவரைக்கரை, புளியங்கண் உள்ளிட்ட நவ்லாக் கிராமம் ப்ரி.ஹோல்ட் கிராமமாக உள்ளது.

(ஆ) அதனை ரயத்துவாரியாக மாற்றுவதற்கு அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

[1978 ஆகஸ்ட் 31

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, அவைகளையெல்லாம் ரெவின்யூ வில்லேஜுகளாக மாற்றவேண்டுமென்று நீண்ட நெடுங் காலமாக அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் கேட்டு கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே அவர்கள் குடியிருக்கிறார்கள். அரசாங்கத்திடமிருந்து அவர்கள் எந்தவிதக் கடனும் பெறமுடியாது. சர்க்காருக்கு அவர்கள் எந்தவிதமான வட்டியும் கட்டுவது கிடையாது. ஆனால் தலைமுறை தலைமுறையாக அவர்கள் அங்கே இருந்து வருகிறார்கள். அந்தக் கிராமங்களை ரெவின்யூ கிராமங்களாக மாற்ற வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கிற தருணத்திலேதான் ஆட்சி கலைக்கப்பட்டது. இப்போது இந்த அரசு அதைச் செய்வதிலே ஆட்சேபணையில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். ஆனால் எப்போது தரப்படும்? அந்தத் தேதியை அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட நீண்ட நெடுங் காலம் என்பதைக் குறித்துச் சொல்ல வேண்டியதில்லை, அது எவ்வளவு காலம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களே அறிவார்கள். இந்தியத் துணைக் கண்டம் விடுதலைப் பெற்ற பிறகு ஒரு ஆட்சி இருந்தது. அதற்குப் பிறகு ஒரு ஆட்சி இருந்தது, அதற்குப் பிறகு 6 ஆண்டுக்காலம் ஒரு ஆட்சி இருந்தது, அப்போது காத்திருந்தார்கள். அந்த 6 ஆண்டுக்கால ஆட்சியிலும் காத்திருந்தார்கள், இப்போது 6 ஆண்டுக்காலம் காத்திருக்க வேண்டாம், சிறிது காலம் காத்திருந்தால் போதும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாத்தனூர் அணைப்பகுதியில் நெல் கொள்முதல்.

* வினா 6—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திருவண்ணாமலை ஒன்றியத்தைச் சேர்ந்த சாத்தனூர் அணை நீர்ப்பாசன பகுதிகளில் முதல் ரக விதைகள் பெற்ற விவசாயிகளிடமிருந்து மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படுவதால் அரசு நிர்ணயித்துள்ள விலை விவசாயிக்கு கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. உராரா. எட்மண்ட்: (அ) வேளாண்மைத் துறையிலிருந்து, விதைநெல் பெற்ற விவசாயிகளிடமிருந்து, விதைக்காக நெல் அந்தத் துறையால் வாங்கப்படுகிறது. வெளிச் சந்தையில் நிலவும் விலைகளுக்கு மேலாக 10 முதல் 15 சதவிகிதம், சுத்தம் செய்தல், காயவைத்தல் முதலிய செலவுகளை ஈடு செய்ய, கூடுதலாகக் கொடுக்கப்படுகிறது.